- "விடுகதை முடிச்சு" குழுக்களாலும் எளிதாக உருவாக்க முடியுமாகையால் தனிப்பட்ட மாணவர்கள் முழு நூலின் ஒரு பகுதியை மட்டும் படிக்கலாம்.
- நூலக பட்டறிவுகள் விடுகதை முடிச்சு உடைய நூல்கள் இளம் சிறார்களால் கூடுதலாக எடுத்துப் படிக்கப்படுவதைக் காட்டுகின்றன.

**மாற்று முறைகள்:**

வகுப்பறை நூலகத்திலுள்ள ஒவ்வொரு நூலுக்கும் மாணவர்கள் விடுகதை முடிச்சினை உருவாக்குதல் மூலம் ஆண்டு இறுதியில் பெரும்பாலும் அனைத்து நூல்களும் விடுகதை முடிச்சினைக் கொண்டிருக்கும்.

# 14 எழுத்தாக்கங்கள் பற்றிய வினாக்களை உருவாக்குதல்

**இலக்கு**

*ஒரு நூலைப் பற்றியோ அல்லது ஓர் எழுத்துருப் பற்றியோ வினாக்களை உருவாக்கி தீர்ப்பதற்கு எழுத்துரு உன்னிப்பாகப் படித்து விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, "விளங்கிக் கொள்ளல் பற்றிய வினாக்களையும்" மற்றும் "உருக்காட்டல் வினாக்களையும்" (கீழே பார்க்க) உருவாக்குவதற்கு, எழுத்துருவில் மறுமொழிகள் வெளிப்படையாக கூறப்படாமையால், உள்ளடக்கம் பற்றிய ஆழமான விளக்கம் வேண்டப்படுகிறது.*

4ம் - 9ம் தரம்

45 - 90 மணித்துளிகள்

**கருவிகள்:**
நூல்கள், சஞ்சிகைகள் (பெரும்பாலும் இணையத்திலிருந்து எழுத்துருக்கள்) குறிப்புத்தாள்

**செயல்முறை:**

- ஒரு கதையையோ, கட்டுரையையோ அல்லது முழு நூலையோ படித்த பின் வகுப்பு இரு குழுக்களாகப் பிரிக்கப்படும். குழுவிற்கு ஒப்படையாக எழுத்துருவின் உள்ளடக்கம் பற்றியும் முதன்மையான மையப்பொருள் பற்றியும் ஏனைய மாணவர்களிடம் வினவுவதற்கு வினாக்களை உருவாக்குதல். அவர்களுடைய வினாக்கள் பின்வரும் மூன்று வகைகளுக்குள் அடங்க வேண்டும்:
  - **நேரடி வினாக்கள்.** இவ் வினாக்களுக்கான விடைகள் பாடத்தில் காணப்படும். இவை பெரும்பாலும் நேரடியானவை (எ.டு. "சரி" அல்லது "பிழை" அல்லது துல்லியமாக காட்டி விடையளிக்கலாம்).
  - **உள்வாங்கல் வினாக்கள்.** இவ் வினாக்கள் உள்ளடக்கம் பற்றி ஆழமாக விளங்கிக்கொண்ட பின்னரே விடையளிக்கப்படக்கூடியவை. இவற்றுக்கு "கூர்ந்தநோக்குப் படித்தல்" வேண்டப்படுகிறது. இவற்றிற்கான விடைகள் முழுமையாக மயக்குநிலையிற் காணப்படுபவையல்ல (எ.டு. அவர் என்ன உணர்வில் இருந்தார்? ஏன் அவள் / அவன் இவ்வாறு நடந்துகொண்டாள் / ன்?).
  - **உருக்காட்டல் வினாக்கள்.** இவ் வகை வினாக்கள் உள்ளடக்கத்துக்கு மேற்பட்டவை. பொதுவாக இவற்றிற்கு சரியான விடைகள் இல்லை, மாணவர்கள் மறுமொழிகளைக் கூற கலந்துரையாடல் வேண்டப்படுகிறது. (எ.டு. கதை முடிவின் பின்விளைவுகள் என்ன? ஏன் அவள் / அவன் இவ்வாறு நடந்துகொண்டாள் / ன்?).
- வினாக்களை விரிவுபடுத்தி மாணவர்கள் ஆசிரியரிடம் வழங்க வேண்டும். பின்னர் ஆசிரியர் வினாக்களை வழங்கி குழுக்களாகவோ அல்லது முழு வகுப்பாகவோ மாணவர்களை விடையளிக்கச் செய்வார்.
- வெவ்வேறு வகை வினாக்களுக்கிடையிலான வித்தியாசம் முன்கூட்டியே உதாரணங்களுடன் விரிவாக கலந்துரையாடப்படும். மதிப்பீட்டு வினாக்களுக்கு துல்லியமான விடைகள் இல்லாததால், எச் சந்தர்ப்பத்திலும், அவை தெளிவாகக் கலந்துரையாடப்பட வேண்டும்.

**குறிப்புகள்:**

- பெரும்பாலும் பல தரப்பட்ட அகவையினருடைய பா.மொ.க வகுப்புக்களில், பொருத்தமான மூன்று மட்டங்களின் பொருத்தமான வேறுபட்ட எழுத்துருக்களுடன் இப் பயிற்சியை மேற்கொள்ளலாம். அனைவரும் ஒரே தலைப்பில் இச் செயற்பாட்டை மேற்கொள்வது சிறந்தது (ஆனால் கட்டாயமானதல்ல). எ.டு. நம் பிறப்பு நாட்டுத் கற்பனைக் கதைகள், இடப்பெயர்வு வாழ்க்கை, இனவாதம், புவியியல், போன்றன.

- இம் மூன்று வகை மட்டங்களில் வினாக்களை வகைப்படுத்தல் "வலுவான மொழி அளிக்கைகார்கள்" ஆகிய கல்விசார் பொருட்களிலிருந்து எடுக்கப்படுவது, அனேக மாணவர்களுக்கு பழக்கப்பட்டதுமாகும். குறைந்த மொழித்தேர்ச்சி (தற்போதும்) உடைய மாணவர்களுக்கு வினாக்கள் இரு வகையாக குறைக்கப்படும் (நேரடி வினாக்களும் உள்வாங்கல் வினாக்களும்).

# 15 ஒரு நூலுக்கான சுவரொட்டியொன்று உருவாக்குதல்

**இலக்கு**

*மாணவர்கள் தாம் படித்த நூலொன்றிற்கு சுவரொட்டிப்படமொன்றைத் தயாரிப்பர். அது நூலை உருக்காட்டல் செய்வதாயும் உள்ளடக்கத்தை சுருக்குவதாயும், இருப்பதோடு நூலாசிரியரையும் தலைப்பையும் பற்றிய ஆய்வையும் கொண்டிருக்க வேண்டும். அதே வேளை, மற்றவர்கள் நூலின் உள்ளடக்கத்தில் ஈடுபாடு உடையவர்களாகவும் அதனைத் தாங்களாகவே படிக்க விரும்புபவர்களாக அமைய நூலானது முன்னிலைப்படுத்த வேண்டும்.*

1ம் - 9ம் தரம்

60 - 90 மணித்துளிகள்



**கருவிகள்:**
பெரிய சுவரொட்டித் தாள் (A3 அல்லது A2 அளவு), நிறப் பென்சில்கள், வர்ணப் பேனாக்கள், பசை

**செயல்முறை:**

- கருத்திட்டமானது இரண்டு அல்லது மூன்று கிழமைகளுக்கு முன்னதாகவே அறிவிக்கப்படும். மாணவர்கள் தாம் தெரிவு செய்த புத்தகமொன்றிற்கு சுவரொட்டி படமொன்றை உருவாக்கி வகுப்பிற்குக் கொண்டுவருமாறு கேட்டுக்கொள்ளப் படுவர். அத்தோடு (பழைய மாணவர்களேனும்), நூலகங்களிலும் நூல் கடைகளிலும் உள்ள ஒரு நூலிற்கு எப்படி சுவரொட்டி எவ்வாறு அமைய வேண்டும் (எ.டு. சுவரொட்டிகள், நூல்கள் பற்றி சஞ்சிகைகளிலுள்ள எழுத்தாக்கங்கள்) என்பதைத் தாமே அறியவேண்டும். புதிய மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான பட நூலை அல்லது கதை நூலை முன்னிலைப்படுத்தலாம், ஆசிரியர் அல்லது மூத்த மாணவர் துணைசெய்யலாம்.
- சுவரொட்டிப்பட வேலைகள் தொடங்குவதற்கு முன், மாணவர்கள் ஒரு நூலிற்கு கவர்ச்சிகரமான விளம்பரமொன்றை ஆக்குதல் தொடர்பாகக் கலந்துரையாடுவர். மாணவர்கள் தமது நூலினைச் சுருக்கி தம் நூலின் உள்ளடக்கத்தை உணர்வூட்டுவதாகவும் கவர்ச்சியுடையதாகவும் கிராபிக் (பசயிாைஉ) முறைகளைப் பயன்படுத்தியும் வாசகர்களை ஈர்க்கும் வகையிலும் தொகுத்து வழங்குவர். பணி: நூலாசிரியர் பற்றியும் செயற்பாட்டின் இடம், காலம் கதைக்களத்தின் காலத்தைப் பற்றிய மேலும் செய்திகள், பொருத்தமான விளக்கப்படங்களையும் தேடுக.
- அடுத்த தொடரில் (ஒரு பாடம் அல்லது இரு பாடங்கள்), மாணவர்கள் தமது நூலுக்கு சுவரொட்டிப்பட விளம்பரமொன்றை உருவாக்குவர். மாணவர்கள் தமது நூலுக்காக விளம்பரப் பதாகையொன்றையும் உருவாக்கலாம்.
- நிறைவு செய்யப்பட்ட சுவரொட்டிகள் ஒரு சிறு நிகழ்வில் காட்சிப்படுத்தப்படலாம். சிறுவர்கள் சிறந்த காட்சிப்படுத்தும் சுவரொட்டியை தெரிவுசெய்யலாம் (ஒவ்வொரு பிள்ளையும் மூன்று புள்ளிகள் வழங்கலாம்.).

**குறிப்புகள்:**

- இக்கருத்திட்டம் வழமையான வகுப்பறைக் கற்பித்தல் முறையில் கூட்டுக் கருத்திட்டமாகப் படித்தலை முன்னேற்றுதல் அல்லது கருத்திட்ட கிழமை சூழலில் பயன்படுத்தப்படுவதற்கு மிக உகந்ததாகும். வழமையான வகுப்பறை ஆசிரியர்களோடு முன்னரேயே தொடர்பினை ஏற்படுத்துவது மிகவும் நல்லதாகும். இவ்வாறான கூட்டுழைப்புக் கட்டமைப்புக்குள் உருவாக்கப்படும் சுவரொட்டிகள் இரு மொழி சார்ந்ததாக இருக்கக் கூடிய நன்மையும் உண்டு..
- ஒரு பிள்ளை தனது தன் நாட்டு மொழியில் எந்த நூலையும் அறியவில்லை, ஆனால் குடியேறிய நாட்டு மொழியில் பிடித்த நூலொன்றைக் கொண்டிருப்பின் அவன் / அவள் அதை தனது பாரம்பரிய மொழியில் விவரிப்பான் / ள்
- மாணவர்கள் நூல்களைப் பற்றி உருவாக்கிய சுவரொட்டிகளில் அல்லது எழுதிய எழுத்துருக்களில் பல நூலகங்களுக்கு ஈடுபாடு உண்டு. அவர்களுடைய சுவரொட்டிகள் நூலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டால் குறிப்பாக வகுப்புக்கு ஊக்குவிப்பாக அமைகின்றது.